**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.204/2025
Prosecution witness.PW3

| | |
|---|---|
| பெயர் : முனியாண்டி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

05.03.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்).

**அரசு தரப்பில் முதல் விசாரணை :-**

1. நான் உத்திரகோசமங்கை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024ம் வருடம் இளஞ்செம்பூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தபோது 13.10.2024ம் தேதி எனக்கு ரோந்து அலுவல் பணி ஒதுக்கப்பட்டிருந்ததால் நானும் நிலைய தலைமைக்காவலர்–1481 முனியசாமி என்பவரும் முதல் நிலைக்காவலர் 2050 மணிகண்டன் ஆகியோரும் சேர்ந்து 16.00 மணிக்கு நிலையத்தில் இருந்து கிளம்பி மது விலக்கு சம்மந்தமாக நெடுங்குளம் ஒருவானேந்தல், தேவர்குறிச்சி, பொதிகுளம் ஆகிய பகுதிகளில் ரோந்து சென்றபோது எனக்கு பொதிகுளத்தில் அருணாசலம் என்பவரது மகன் வீரபத்திரன் அவரது பெட்டிக்கடையில் அரசு அனுமதி இல்லாமல் மது பானங்களை விற்பனை செய்வதாக இரகசிய தகவல் கிடைத்ததால் நாங்கள் மூவரும் மேற்படி பெட்டிக்கடை அருகே சென்றபோது ஆஜர் எதிரியானவர் வெள்ளை நிற சாக்குப்பையுடன் அங்கு நின்று கொண்டிருந்தார்.

2. ஆஜர் எதிரி எங்களை கண்டதும் அவர் கையில் வைத்திருந்த சாக்குப்பையை மறைக்க முயன்றதால் போலீஸ் பார்ட்டி சகிதம் அவரைப் பிடித்து அவர் வைத்திருந்த சாக்குப்பையை சோதனை செய்த போது அதில் சுமார் 180 மி.லி. அளவுள்ள Old chef Brandy என்ற டாஸ்மாக் லேபிள் ஒட்டப்பட்ட மதுவுடன் கூடிய 5

பாட்டில்கள் இருந்தது. அவைகளை குறித்து விசாரித்தபோது ஆஜர் எதிரியானவர் அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் சுய இலாபத்திற்காக அரசு மதுபானக்கடையில் வாங்கி விற்பனைக்காக வைத்திருப்பதாகக் கூறினார். அதனால் அங்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் சென்ற போலீசார் முன்னிலையில் எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து அவர் வைத்திருந்த 5 மதுபாட்டில்களை 16.15 மணிக்கு மகஜரில் கைப்பற்றி அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

**3.** கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துடன் எதிரியை 16.45 மணிக்கு நிலையம் அழைத்து வந்து அவர் மீது நிலைய குற்ற எண்.80/2024 சட்டப்பிரிவுகள் 4(1)(C) TNP Act– ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை தக்க பிணையத்தில் விடுவித்தேன். தலைமைக்காவலர்–1481 முனியசாமி மற்றும் முதல் நிலைக்காவலர் 2050 மணிகண்டன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம்–91ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து பி.ஆர்.எண்.148/2025 பெற்றேன். அந்த **படிவம்–91 அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **சுமார் 180ML அளவுள்ள மதுவுடன் கூடிய Old Chef Brandy 5 பாட்டில்கள் அசா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் அத்துடன் வழக்கின் விசாரணையை 13.10.2024ம் தேதியன்று முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 4(1)(C) TNP Act– ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. அன்றைய தினம் ரோந்து அலுவல் சென்றது குறித்து பொது நாட்குறிப்பேட்டில் பதிவுகள் உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் இரகசிய தகவலின் பேரில் எதிரியின் பெட்டிக்கடைக்கு சென்றதாக கூறியுள்ள நிலையில் அவர் வைத்திருந்ததாக சொல்லப்படுகிற சாக்குப்பையை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கைப்பற்றாததற்கு தனிப்பட்ட காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

5. சட்டப்படி ஒரு எதிரியிடமிருந்து சோதனையோ, கைப்பற்றுதலோ செய்ய வேண்டும் என்றால் அதை வீடியோ பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். ஆனால்

வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படுவதை வீடியோ பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வீடியோ பதிவு செய்யாததால் எதிரியிடமிருந்து தடயம் கைப்பற்றியதாக சொல்லப்படுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. மேலும் நான் கூறியபடி மதுபானங்கள் கைப்பற்றப்பட்டிருந்தால் அதை பொது மக்கள் முன்னிலையில் கைப்பற்றியிருப்பேன் என்றாலும் எனக்கு கீழ் பணிபுரியும் போலீசாரை வைத்து நானே நிலையத்தில் ஆவணங்களை தயார் செய்துவிட்டு புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது வழக்கிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.